தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 5 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

- பின்வரும் பந்திகளின் பிரதான கருத்தைத் தெரிவு செய்க.

01. பாலோடு கலந்த நீரானது பாலாகவே தெரியும். நீராக இருக்கமாட்டாது. சிறுமைக் குணமுடையவர்களம் உயர்ந்த குணமுடைய பெரியோருடன் சேர்ந்தர் மேன்மக்களாவர்.
   1. பாலிலிருந்து நீர் தனிப்பட்டுத் தெரியாது
   2. கீழோர் நீரைப் போன்றவர்கள்
   3. கீழோர் மோலோரைச் சேர்ந்தர் மேன்மக்களாவர்
   4. கீழோருடன் சேர்வதால் மேலோர் பாதிக்கப்படுவர்

02. தமிழ் கற்கும் மாணவர்கள் இன்றியமையாத நூல்களை ஐயந்திரிபுகளின்றித் திருத்தமாகவும் அழுத்தமாகவும் கற்றல் வேண்டும். ஆசிரியா, மாணவர் மனத்தில் அறிவைப் புகுத்திவிட முடியாது. எதிர்காலத்தில் எதையும் கற்கக் கூடியவகையில் தம் அறிவைப் பண்படுத்த வேண்டும்.
   1. ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அறிவைத் திணித்து விடவேண்டும்
   2. மாணவாகள் சுயமாகக் கற்பதற்கு ஆசிரியர் உதவ வேண்டும்
   3. மாணவர் ஐயந்திரிபறக் கற்க வேண்டும்
   4. மாணவரின் கற்றலுக்கு ஆசிரியர் உதவுதல் கூடாது

- மிகப்பொருத்தமான நிறைவுப் பகுதியைத் தெரிவு செய்க

03. மகாகவி சுப்பிரமணிய பாரதியரிர் பெரியோர்களுக்கு மாத்திரமன்றி
   1. சிறுவர்களுக்கும் கவி பாடினார்
   2. சிறுவர்களுக்குக் கவி பாடினார்
   3. சிறுவர்களுக்கு மட்டும் கவி பாடினார்
   4. சிறுவர்களோடும் கவி பாடினார்

04. கலைவிழாவிற்கு பெருந்திரளான மக்கள்
   1. சமூகமளித்தனர்
   2. சமுகமலித்தனர்
   3. சமூகமழித்தனர்
   4. சமுகமளித்தனர்

05. நீங்கள் கொண்டுவந்த மாம்பழங்கள்
   1. ஒவ்வொன்றும் இனிமையாயுள்ளது
   2. இவ்வொரு இனிமை உடையவை
   3. ஒவ்வொன்றும் இனிமையாயுள்ளன
   4. ஒவ்வொன்றும் இனிமையானவை

பகுதி 2

பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடை எழுதுக

1. சுருக்கமான விடை தருக.

   i. ‘பரித்தேரேறி வா வென்றழைப்பன போல்’ எனும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.
   ii. பெயரெச்சத்தொடருக்கு இரு உதாரணங்கள் தருக
   iii. “விரிகுழல் பைந்தொடி நாணி வேத்தவை…” தரப்பட்ட தொடரில் இடம் பெற்றுள்ள தொகைகளை இனங்கண்டு எழுதுக
   iv. பின்வருவனவற்றுள் அறிக்கை ஒன்றில் இடம்பெறும் பிரதான இரு அம்சங்களை குறிப்பிடுக
      கவர்ச்சியான தலைப்பு, இடம், நேரம், காலம் செவ்வி காணுதல், சமர்ப்பிப்பவர், உத்தரவாதம்
   v. காலம் காட்டும் இடைநிலைகள் இரண்டு தருக
   vi. பசுந்து, காடி என்பன எப்பிரதேச வழக்குச் சொற்கள் எனக் குறிப்பிட்டு இவற்றின் நியம வழக்கினை தருக
   vii. தரப்பட்ட வாக்கிங்களுக்குப் பொருத்தமாக இணைப்பிடைச் சொல்லைப் பயன்படுத்தி மீண்டும் எழுதுக.
      அ. இன்று உலகம் உள்ளங்கைக்குள் சுருங்கி விட்டது
      ஆ. மனிதர்கள் மனிதப் பண்பில் விருத்தியடையவில்லை
   viii. அகராதி, நிகண்டு என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டைத் தருக
   ix. ஓ அதுவோ அவவோடை நான் என்னத்தைப் பேசிறது அவ தன்பாட்டுக்கு மூத்தக்காவோடை இங்கிலீசையும் பேசிக் கொண்டு திரியிறா என்றேன். தரப்பட்ட வாக்கியத்திற்குப் பொருத்தமான நிறுத்தற் குறியீடுகளை இட்டு மீண்டும் எழுதுக.
   x. தையல் வேலையில் இருக்கிறாள். தரப்பட்ட வாக்கியத்தினை இரு பொருள் தரும் வகையில் எழுதுக.